சென்னை,
திருச்சி,
கரூர்,
நாமக்கல்,
சேலம்,
கோவை,
திருப்பூர்,
ஈரோடு,
நெல்லை,
தூத்துக்குடி,
பெரம்பலூர்,
அரியலூர்,
புதுக்கோட்டை
மற்றும்
புதுச்சேரி.

உலகத் தமிழர்களின் உணர்விதழ்

வாகை

பொறுப்பாசிரியர்: மா.தமி

வாகை-7 மலர்-8 திருவள்ளுவராண்டு - 2042 நளி-சிலை(கார்த்திகை

## முல்லைப் பெரியாறு அணை

# கரூரில் முழு

கரூர்:

முல்லைப் பெரியறு அணையை உடைத்துவிட்டு புதிய அணையை கட்ட கேரள அரசு முயல்வதைக் கண்டித்து கரூரில் தமிழர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு மற்றும் கருரில் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்களும் விடுத்துள்ள கடையடைப்பு போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து கரூர் பகுதி முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டு இருந்தது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

கேரளாவில் உள்ள பெரியாறு அணையை 142 அடியாக உயர்த்த வேண்டும் என்று தமிழகம் போராடி வருகிறது. உச்ச நீதி மன்றம் ஆணையிட்டும் கேரள அரசு அந்த ஆணையை கிடப்பில் போட்டுவிட்டு தான் என்ற மமதையில் செயல் படுகிறது. மேலும் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் அரசு அதிகாரியாக இருந்த பென்னிக்குக் என்பவர் தனது சொந்த பணத்தில் கட்டி விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க அணையைக் கட்டி இரு மாநிலங்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென 999 ஆண்டுகள் ஒப்பந்தம் போட்டுள்ளார்.

இந்த அணையை உடைத்து விட்டால் தமிழகத்திற்கு தண்ணீர் தர வேண்டிய அவசியம் இருக்காது என்பதற்காக கேரளாவின் உம்மண் சாண்டி அரசு, அணையின் உறுதித் தன்மை பற்றி தவறான செய்தியை மக்களிடம் பரப்புரை செய்து வருகிறது. இதனால் தமிழக, கேரள மக்களிடையே பெரும் அச்சத்தை உருவாகிறது.

கேரள அரசைக் கண்டித்தும் பாதுகாக்க வேண்டுமெனவும் மைய அரசை வலியுறுத்தி கரூர் பகுதி முழுவதும் கடையடைப்பு நடத்தப்பட்டது. தமிழர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு மற்றும் காமராஜ் மார்க்கெட் காய்கறி வியபாரிகள் சங்கம், உழவர் சந்தை வியபாரிகள் சங்கம், வெங்கமேடு வியபாரிகள் சங்கம், ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம், இரு சக்கர பழுது நீக்குவோர் சங்கம், அரிசி வியபாரிகள் சங்கம், கரூர் மாவட்ட உணவகங்கள் சங்கம், தேனீர் பேக்கரி சங்கம், நகைக் கடை சங்கம், துணிக் கடை நிறுவனங்கள், சிறு வியபாரிகள், எலட்ரிக்கல் எலட்ரானிக் கடை வியபாரிகள் சங்கம் என பல்வேறு சங்கங்களும் இந்த கடையடைப்புக்கு முழு ஆதரவு தந்து வெற்றி பெறச்செய்துள்ளனர்.

இந்தக் கடையடைப்புக்கு பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைச்செயலாளர் பாசுகரன், நகரச் செயலாளர் முருகேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில துணைச் செயலாளர்கள் அக்னி அகரமுத்து, அண்ணாதுரை, புதிய தமிழகம் கட்சி மாவட்டச் செயலாளர் பாண்டியன், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் மாவட்டச் செயலாளர் சக்திவேல், புரட்சி பாரதம் கட்சி மாவட்டச் செயலாளர் சுரேசு குமார், ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் வீரமுருகு, கரூர் மாவட்ட தமிழ்ப் பேரவை வழக்கறிஞர் இராசேந்திரன், தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு சாமியப்பன், வ.உ.சி. பேரவை வடிவேலன், தமிழர் களம் தமிழ்முதல்வன் ஆகியோர் செய்திருந்தனர்.

கடையடைப்பைத் தொடர்ந்து கேரள முதல்வர் உம்மன் சாண்டி



மாதமிருமுறை

# கு மலர்

ழ்முதல்வன்

-மார்கழி) (டிசம்பர் 2011) புரட்டாசி-ஐப்பசி விலை ரூ. 300 காசுகள்

விரைவில்...
வெளிவரவுள்ளது.
தமிழர்கள் படித்து
பாதுகாக்க வேண்டிய
புத்தகம். தமிழர்களைப்
பற்றிய ஒரு சிறு
ஆய்வு நூல்.
நெஞ்சு பொறுக்குதில்லையே...!

## யைக் காக்க வலியுறுத்தி

# கடையடைப்பு

உருவ பொம்மையை கரூர் பேருந்து நிலையம் காமராஜ் சிலை அருகே எரித்தனர். அப்போது முல்லைப் பெரியாறு அணையைக் காப்போம், இடுக்கி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைத்திடவும் அமைதியாக இருக்கும் மத்திய அரசைக் கண்டித்தும் கரவொலி எழுப்பினர். பின்னர் 25 பேர் கைதாகி விடுதலைச் செய்யப் பட்டனர்.



கடையடைப்பு நடத்த வலியுறத்தி பேரணி வரும் ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் வீரமுருகு, தமிழக மக்கள் முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் சக்திவேல், தமிழர் களம் மாவட்டச் செயலாளர் தமிழ்முதல்வன், பாட்டாளி மக்கள் கட்சி நகரச் செயலாளர் ராக்கிமுருகேசன், பாட்டாளி மக்கள் கட்சி மாநில துணைச் செயலாளர் பாசுகரன், புதிய தமிழகம் கட்சி மாவட்டச் செயலாளர் பாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாநில துணைச் செயலாளர் அகரமுத்து மற்றும் அனைத்து கட்சி உறுப்பினர்கள் தமிழ் உணர்வாளர்கள் என பலரும் கலந்து கொண்டு பேரணியாக வருகின்றனர்.